தமிழ்நாடு ஊரக தொழில் காப்பு - புத்தொழில் உருவாக்கு நிறுவன நிர்வாக அலுவலகம்!

● இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 4 -

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, கிண்டியில் TNRISE தமிழ்நாடு ஊரக தொழில் காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்கு நிறுவனத்தின் நிர்வாக அலுவலகத்தை திறந்து வைத்து, TNRISE இலட்சினையை (Logo) வெளியிட்டு, TNRISE இணையதளத்தை துவக்கி வைத்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, இன்று, மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த இலட்சக்கணக்கான பெண்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டியாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

இச்சிறப்புமிகு நிறுவனத்தின் துணை நிறுவனமான வாழ்ந்து காட்டுவோம் 2.0 திட்டம் (ஊரகப் புத்தாக்கத் திட்டம்) ஊரகப் பகுதிகளில் கிராமப்புறத் தொழில்களை ஊக்குவித்தல், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துதல், மகளிர் தொழில் முனைவோர் மூலம் கிராமப்புறங்களில் தொழில் உருவாக்குதல் ஆகியவற்றை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்துடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது.

பெண் தொழில் முனைவோர், நிதி, சந்தைகள், தொழில் தொடர்புகள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றை எளிதாக பெறுவதற்கு பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. "மகளிர் தொழில் முனைவோர் இந்த சவால்களை எதிர்கொள்ள, அவர்களுக்கென பிரத்யேக "புத்தொழில் இயக்கம்" ஒன்றை தமிழ்நாடு அரசு உருவாக்கும் எனவும், இந்த இயக்கம் மகளிர் தொழில் முனைவோருக்கு அவர்களின் தொழில் சார்ந்த அனைத்து அம்சங்களிலும் தேவையான மேம்பட்ட உதவிகளை வழங்கும்" எனவும் சட்டமன்றத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (02.07.2024) சென்னை, கிண்டி தொழிற்பேட்டையில் TNRISE தமிழ்நாடு ஊரக தொழில் காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்கு நிறுவனத்தின் நிர்வாக அலுவலகத்தை திறந்து வைத்து, TNRISE திட்டத் தினை தொடங்கி வைத்தார்கள். தொடர்ந்து TNRISE இலட்சினையை (Logo) வெளியிட்டு, இணையதளத்தையும் (www.tnrise.co.in) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (02.07.2024) சென்னை, கிண்டி தொழிற்பேட்டையில் "TNRISE" தமிழ்நாடு ஊரக தொழில் காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்கு நிறுவனத்தின் நிர்வாக அலுவலகத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் / வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மைச் செயல் அலுவலர் திருமதி. ச.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர்/ வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்கு அலுவலர் திருமதி. ஸ்ரேயா பி.சிங், சமிக்கந்தர்தாஸ் (Task Team Leader, The World Bank) மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள அலுவலகத்தில் அனைத்து நவீன வசதிகளையும் உள்ளடக்கிய வகையில் கலை நயத்துடன் மகளிர் தொழில் முனைவோருக்கு தேவையான பிரத்யேக வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த மையம், தற்போதுள்ள தொழில் காப்பு மையங்களை (Business Incubation Centers) எளிதில் அணுக இயலாத ஊரக, நகர்ப்புற மகளிர் நடத்தும் தொழில் நிறுவனங்களுக்கு தேவையான உயர் நிலை சேவைகளை வழங்குவதன் மூலம் மாநிலத்தின் தொழில் வணிக சூழலில் மகளிர் தொழில் முனைவோருக்கும் மற்ற தொழில் முனைவோருக்கும் உள்ள இடைவெளியை குறைக்கும் வகையில் செயல்படும்.

ஆண்டுதோறும் நூற்றுக் கணக்கான மகளிர் தொழில் முனைவோர் மற்றும் மகளிர் தொழில் குழுக்கள் இம்மையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு பயன் பெற இருக்கின்றனர். மேலும் இத்தகைய தொழில் முனைவோருக்கு வழிகாட்டவும், தேவையான சேவைகளை வழங்கவும் தமிழகத்தில் மட்டுமின்றி உலக அளவில் பிரசித்தி பெற்ற Flipkart, HP, SICCI, StartupTN மற்றும் பல நிறுவனங்களுடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னிலையில் இன்றைய தினம் TNRISE நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் / வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி ச.திவ்ய தர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் / வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்கு அலுவலர் திருமதி ஸ்ரேயா பி.சிங், சமிக் சுந்தர் தாஸ் (Task Team Leader, The World Bank), முதன்மைச் செயல் அலுவலர் திருமதி உமா மகேஸ்வரி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு உரிய நிதியை ஒதுக்காமல்

தமிழ்நாட்டின் மீது வன்மத்தைக் காட்டுவது கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிரானது!

மாநிலங்களவையில் – டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேச்சு!

புதுடெல்லி, ஜூலை 4 -

மாநிலங்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கழக உறுப்பினர் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசியதாவது :-

இந்த நாடு தெரிந்து கொள்ள வேண்டிய சில உண்மைகளை இந்த அவையில் பேச எனக்கு வாய்ப்பளித்த எங்கள் தலைவர் மாண்புமிகு தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு முதலில் என் நன்றிகள்.

தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சி அமைத்திருப்பதாக ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார். சுயமாக செயல்பட முடியாத அளவுக்கு, கூட்டணிக் கட்சிகள் உதவியுடன் அமைந்த மைனாரிட்டி அரசு இந்த மூன்றாவது அரசு என்பதை அவர் சொல்ல மறந்துவிட்டார். நானூறு இடங்கள் என்று கோஷமிட்டவர்களுக்கு மக்கள் சரியான பாடம் புகட்டி இருக்கிறார்கள்.

அமெரிக்காவுக்கு ஒரு விக்கிலீக்ஸ் போல எத்தனையோ ரகசியங்கள் கசிந்ததை இந்த உலகம் பார்த்திருக்கிறது. கடந்த பத்தாண்டு காலபி.ஜே.பி. அரசிலும் பல விஷயங்கள் கசிந்துள்ளன. 'நீட்'வினாத்தாள், நெட் தேர்வு வினாத்தாள் போன்றவை கசிந்ததுடன், விமான நிலையகூரைகள், ராமர் கோவில் கூரை, வந்தே பாரத் ரயில் கூரை என பலவும் இந்த ஆட்சியில் கசிந்து ஒழுகுகின்றன. இத்தனையும் பார்த்து இந்த நாட்டு மக்கள் ரத்தம் கசிகிறார்கள் என்பதுதான் உண்மை.

அதேபோல மோடியின் ஆட்சியில், விமான நிலையங்கள், பாலங்கள், பணமதிப்பு, ஜனநாயகம், கூட்டாட்சி என பலவும் வீழ்ந்து வருகின்றன. இன்னும் எத்தனை வீழப்போகிறதோ யாருக்கும் தெரியவில்லை.

கண்துடைப்புக்காக கொண்டுவந்த மசோதா!

அவசர நிலை காலத்தைப் பற்றி ஜனாதிபதி கவலை தெரிவித்திருக்கிறார். இவர்களுக்கு உண்மையிலேயே அவ்வளவு கவலை இருக்குமானால், அந்தக் காலகட்டத்தில் பொதுப் பட்டியலுக்கு மாற்றப் பட்ட கல்வியை இப்போது மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும்.

சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் பற்றியும் ஜனாதிபதி பேசியிருக்கிறார். இந்த விஷயத்தில் இதே அரசு எவ்வளவு அவசரம் அவசரமாக பெண்கள் இடஒதுக்கீட்டும் சோதாவைகண்துடைப்புக்காகக் கொண்டுவந்தது என்பதை இந்த நாடு அறியும். அந்த சட்டத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டுமானால், தொகுதி மறுவரையறை செய்ய வேண்டும். அதற்கு மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த வேண்டும். ஆனால் இந்த அரசு அதைச் செய்யாமல் மவுனம் காக்கிறது. இதைத்தான் 'போகாத ஊருக்கு வழி தேடுவது மாதிரி'என் பார்கள் தமிழில். இந்த அரசு செயல்படுத்த முனைகிற பல திட்டங்களும் இப்படித்தான் இருக்கிறது.

கடந்த பத்தாண்டுகளில் பதினைந்து எய்ம்ஸ்மருத்துவமனைகளைக் கட்டியதாகச் சொல்கிறார்கள். அதை பதினான்கு என்று திருத்துங்கள். அவற்றில் ஒன்றாக நீங்கள் சுட்டிக்காட்டும் எய்ம்ஸில் ஒரு சுவர்கூட இன்னும் கட்டப்படவில்லை. மக்களை ஏமாற்றாதீர்கள்.

நீட் வினாத்தாள் கசிந்ததை சர்வ சாதாரணமாக எடுத்துக்கொண்டு, கடந்த காலங்களிலும் இப்படி நடந்திருக்கிறது என்கிறார் ஜனாதிபதி. அப்படி சாதாரணமாகச் சொல்லாதீர்கள். இது லட்சக்கணக்கான மாணவர்களின் எதிர்காலம் மட்டுமல்ல... அவர்களின் கல்விக்காக ஒவ்வொருவரின் ஒட்டுமொத்த குடும்பத்தினரின் உழைப்பும் இதில் அடங்கியிருக்கிறது. ஆனால் நீட் தேர்வு முறை

கேடுகள் பற்றி இந்த அரசு உருப்படியாக வாய் திறந்து எதுவும் சொல்லவில்லை.

பொருளாதார சமமற்ற நிலை!

பிரிட்டிஷாரின் காலனி ஆதிக்கத்தில் இருந்ததை விட, இப்போது இந்த கோடீஸ்வரர்கள்ராஜ்ஜியத்தில் பொருளாதார சமமற்ற நிலை அதிகமாக இருக்கிறது. இந்த நாட்டில் 70 சதவிகிதம் மக்கள் தினசரி நூறு ரூபாய் கூட சம்பாதிக்க முடியாமல் திண்டாடுகிறார்கள். ஆனால் 10 சதவீத பணக்காரர்கள் தாங்கள் வளர்க்கும் நாய்களுக்கு தினசரி ஆயிரக்கணக்கில் செலவிடுவதையும் பார்க்க முடிகிறது. மீதமுள்ள 20 சதவீதத்தினர் எந்தப் பக்கமும் போக முடியாமல் தவித்து வருகிறார்கள். இந்தப் பொருளாதார சமநிலையற்ற தன்மை பெண்களையும் குழந்தைகளையும் அதிகம் பாதிக்கிறது.

சமூக வாரியாக இந்த சமநிலையற்ற தன்மை படிந்துள்ளதால்தான், இதற்கு நிரந்தரத் தீர்வு காண சாதி வாரி கணக்கெடுப்பு நடத்துவது அவசியம் என்பது வலியுறுத்தப்படுகிறது. ஆனால் இந்த அரசு அதைச் செய்ய மனமில்லாமல் இருக்கிறது. இப்போதுள்ள கணக்கீடுகள் சில பத்தாண்டுகள் பழமையான, பயனற்ற கணக்கீடுகள்என்பதையும் இந்த அரசு உணர்ந்துகொள்ளமறுக்கிறது.

பணவீக்கத்தாலும், ஏழ்மை மற்றும் வேலை வாய்ப்பின்மையாலும் நடுத்தர வர்க்கத்தினர் ஏழைகளாகவும், ஏழைகள் பரம ஏழைகளாகவும் மாறிவருவது துக்க கரமானது.

தமிழ்நாடு போன்ற பி.ஜே.பி. ஆளாத மாநிலங்கள் மீது ஒன்றிய அரசின் பார்வை படுவதே இல்லை. அம்மாநிலமக்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடனே இந்த அரசு நடத்துகிறது. இது நம் அரசியல் சட்டத்தால்வலியுறுத்தப்பட்டுள்ள கூட்டாட்சி தத்துவத்திற்கு முற்றிலும் எதிரானது.

வேலை வாய்ப்பின்மை மற்றும் பணவீக்கம் நம்மை அச்சுறுத்துக் கொண்டுள்ளது... இதை சரிசெய்யாவிட்டால் மாநிலங்களின் தன்னாட்சியுடைய நிதியாதாரம் பாதிக்கப்படும் என்பதையும் ஒன்றிய அரசு உணரமறுக்கிறது. மொத்தத்தில் சொல்ல வேண்டுமானால், இந்த நாட்டின் ஏழைகள் மற்றும் நடுத்தர மக்கள் பற்றி இந்த அரசு கவலைப்படவே இல்லை. தமிழ்நாடும் இப்படி வஞ்சிக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்று.

பொய் வாக்குறுதிகள் - பொய்ப் பிரச்சாரங்கள்!

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை சிந்துபாத்கதை போலநீண்டுகொண்டே போகிறது. இவ்வளவு தாமதம் ஆகிறது என்பதை ஒப்புக்கொள்ள இந்த அரசு மறுக்கிறது. அதேபோல சென்னை மாநகர போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வழிசெய்யும் இரண்டாவது கட்ட சென்னை மெட்ரோ ரயில் திட்டத்துக்கு 63 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக 2021 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலின் போது பிரதமரே சொன்னார். ஆனால் 2024 ஜூலை மாதம் வரை ஒரு ரூபாய் கூட இத்திட்டத்திற்காக ஒதுக்கவில்லை. எவ்வளவு பெரிய துரோகம் இது?

இதுபோல தமிழ்நாட்டின் அத்தியாவசியமான, உட்கட்டமைப்புத் திட்டங்கள் பலவற்றுக்கும் உரிய நிதியை ஒதுக்காமல் வேடிக்கை பார்க்கிறது ஒன்றிய அரசு. இது அரசியல் சட்டத்திற்கு விரோத மானது. எதற்காக இந்த ஓரவஞ்சனை? தமிழகத்தில் ஒரு இடம் கூட வெற்றி பெறாததால், தமிழ்நாட்டு மக்கள் மீது பிரதமரும் அவரது அமைச்சரவை சகாக்களும் கோபமாக இருக்கிறார்களா? இது ஜனநாயகமா?

கடந்த பத்தாண்டுகளாக பட்ஜெட் உரைகள் வாசிக்கப்படுகின்றன. ஆனால் அதில் சொல்லப்பட்ட திட்டங்கள், அறிவிப்புகள் எல்லாமே நேர்மையற்றதாகவும் பொய்கள் நிறைந்ததாகவும் இருந்திருக்கின்றன. இப்படி பொய்யான வாக்குறுதிகள், பொய்ப்பிரச்சாரங்கள் செய்வதிலிருந்து இந்த அரசு வெளியே வரவேண்டிய நேரம் வந்துவிட்டது. இனிமேலாவது மக்களுக்கு நேர்மையானவர்களாக இருங்கள்.

ஆண்டுக்கு இரண்டு கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்குவோம் என்றீர்கள்... பத்தாண்டுகளில் இருபது கோடி வேலை வாய்ப்புகள்உருவாகியிருக்க வேண்டும். ஆனால், பத்து கோடி பேர் பார்த்த வேலையை இழந்திருக்கிறார்கள். இன்னும் பல லட்சம் பேர் வேலையை இழந்து கொண்டிருக்கிறார்கள்.

2022 ம்ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவோம் என்று சொன்னீர்கள். அது நடக்கவில்லை. ஆனால், விவசாயிகள் தற்கொலை செய்யும் எண்ணிக்கைதான் இரண்டு மடங்காக உயர்ந்திருக்கிறது. அதேபோல பெட்ரோல் டீசல் விலையை குறைப்பதாகச் சொன்னீர்கள். பெட்ரோல் விலை லிட்டர் நூறு ரூபாயைத் தாண்டி பல மாதங்கள் நீடிப்பதை இந்த அரசு வேடிக்கைதான் பார்க்கிறது. விலைவாசி உயர்வு பற்றியும் இந்த அரசு கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

மெஜாரிட்டி பலத்தை வைத்து நீங்கள் விரும்பிய படியெல்லாம் மக்கள் விரோத சட்டங்களைக் கொண்டுவந்து, விவாதமின்றி நிறைவேற்றினீர்கள். அதனால்தான் இப்போது உங்களை மைனாரிட்டிஅரசாக மக்கள் சுருக்கியிருக்கிறார்கள். இனிமேலும் உங்களை நீங்கள் திருத்திக் கொள்ளவில்லை என்றால், ஆட்சி அதிகாரத்தில் இருந்து முற்றிலுமாக தூக்கி எறியப்படுவீர்கள் என்பது உறுதி.

நிறைவாக இரண்டு கருத்துக்களைச் சொல்கிறேன்... கடந்த காலங்களில் என்ன நடந்திருந்தாலும் சரி... வாக்குறுதி என்பது வாக்குறுதிதான். ஏழை மற்றும் நடுத்தர மக்கள் அந்த வாக்குறுதிகள் நிறைவேறும் என்று நம்பிக் காத்திருக்கிறார்கள். அதை நிறைவேற்ற மறுப்பது பாவச் செயல்.

இனியும் பொய்யான வாக்குறுதிகள் கொடுத்து ஏழைகளைக் கொல்லாதீர்கள். ஏழைகளின் சாபத்தை குரைத்து மதிப்பிடாதீர்கள். பலம்மிக்க ஏவுகணைகளை விட ஏழைகளின் கண்ணீரும் சாபமும் சக்தி வாய்ந்தவை என்பதை மறக்காதீர்கள்.

இனிமேலாவது ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு விசுவாசமாகவும், நம்பிக்கை உடையவர்களாகவும் இருங்கள். அவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி நாட்டில் சமூக நீதியும், சமதர்மமும், மத ஒற்றுமையும், கூட்டாட்சி தத்துவமும் தழைத்தோங்க வழி செய்யுங்கள்.

இவ்வாறு டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு மாநிலங்களவையில் பேசினார்.

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, காணை வடக்கு ஒன்றியம், நல்லாப்பாளையம் ஊராட்சியில் கழக வேட்பாளர் அன்னியூர் அ.சிவாவை ஆதரித்து திருப்பத்தூர் மாவட்ட ச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ, பிரச்சாரம் மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியில் அ.செ.வில்வநாதன், எம்.எல்.ஏ. முருகன், வி.சி.க. ஒன்றிய கழகச் செயலாளர் ஆசைத்தம்பி, எம்.ஆர்.ஆறுமுகம், வி.எஸ்.சாரதிகுமார், ம.அன்பழகன், ப.ச.சுரேஷ்குமார், க.உமாகன்ரங்கம், கே.சதிஷ்குமார், கவிதாதண்டபாணி, கே.ஆர்.திருப்பதி, டி.அசோக்குமார், சத்தியநாராயணன், வீ.வடிவேல், தே.பிரபாகரன், எம்.சிங்காரவேலன், சி.எஸ்.பெரியார்தாசன், ராஜேந்திரன் மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியம் முட்டத்தூரில் தி.மு.க. நிர்வாகிகள் பாக முகவர்கள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டத்தில் சிறு, குறு மற்றும் தொழில் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், வணிகவரி மற்றும் பத்திர பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினர். அருகில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, விழுப்புரம் வடக்கு மாவட்ட பொருளாளர் ரமணன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், விக்கிரவாண்டி தெற்கு ஒன்றிய செயலாளர் வேம்பி ரவி, ஒன்றிய கவுன்சிலர் முகிலன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கருணாநிதி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

சமஸ்கிருதத்தில் பெயரிடுவதை நாங்கள் முதலிலேயே எதிர்த்தோம்!

நாடாளுமன்ற அமளியின் போது - குற்றவியல் சட்டங்களை நிறைவேற்றுவதா?

கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. கண்டனம்!

புதுடெல்லி, ஜூலை 4-

"நாடாளுமன்றத்தில் அமளி நடந்துகொண்டிருந்தபோது, குற்றவியல் சட்டங்களை நிறைவேற்றுவதா?" என கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தி.மு.க சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள், "புதிய மூன்று குற்றவியல் சட்டங்கள் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதன் செயல்முறையும் தமிழில் நடைபெறும். தமிழ்நாடு முதலமைச்சரோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ இவற்றின் பெயர்களுக்கான அவர்களின் எதிர்ப்பு குறித்து கலந்தாலோசிக்க நேரம் கோரவில்லை. நான் அவர்களிடம் மீண்டும் கூறிக்கொள்கிறேன். உங்களுக்கு ஏதேனும் குறைகள் இருந்தால் என்னைச் சந்தியுங்கள். சட்டங்களைப் புறக் கணிப்பது சரியாகாது" என்று இச் சட்டங்கள் தொடர்பாகத் தமிழ்நாடு முதலமைச்சரின் ஆட்சேபணை தொடர்பாகக் கருத்து தெரிவித்திருப்பதாக,

தி இந்து' ஆங்கில நாளேட்டில் செய்தி வெளியாகியுள்ளது.

புதிய மூன்று குற்றவியல் சட்டங்களுக்கு சமஸ்கிருதத்தில் பெயரிடுவதற்கு நாடாளுமன்றத் தேர்வுக் குழுவில் நாங்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தோம்.

இச்சட்ட முன்வடிவுகள் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட போது, நாடாளுமன்ற அவைக்குள் நடந்த அத்துமீறல் குறித்து எதிர்க்கட்சியினர் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தனர் என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

ஒன்றிய அரசுக்கு உண்மையாகவே ஜனநாயக உணர்வு இருக்குமானால், எதிர்க்கட்சியினர் அவையினில் இல்லாதபோது இந்தச் சட்டங்களை நிறைவேற்றியிருக்கக் கூடாது.

ஜனநாயகத்தைக் கடைபிடியுங்கள், போதிக்காதீர்கள்!

இவ்வாறு என்.ஆர். இளங்கோ, தமது வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிடும் அன்னியூர் ஏ.சிவாவை ஆதரித்து ஆத்தூர் ஊராட்சியில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வாக்குச் சேகரித்தார்.